# <u>பொருள்கள்</u>

1 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் – க்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய சந்தா தொகைரூ.75,000/– லிருந்து ரூ.1,50,000/– ஆக உயர்த்தி வெளியிடப்பட்ட அரசாணை எண்.145 நாள் 21.09.2011 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

மேற்படி தொகையை ஆண்டுதோறும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1.அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. மேற்படி அரசாணையின்படி ஆண்டுதோறும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர்– க்கு சந்தா தொகை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9220/2009/சி1

**தீர்மான எண் : 10 – அனுமதிக்கப்பட்டது.**

2. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் – க்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய 2011–2012 – ம் ஆண்டுக்கான சந்தா ரூ.1,50,000/– செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. அரசாணை எ.ண்.145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 21.09.2011 – ல் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா தொகையை சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு ரூ.75,000– லிருந்து ரூ.1,50,000/– ஆக உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

2. அனுமதிக்கலாம்.

3. அவசர அவசியம் கருதி மேற்படி தொகை ரூ.1,50,000/– தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9220/2011/சி1

**தீர்மான எண் : 11 – அனுமதிக்கப்பட்டது.**

3. நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்திற்குள் செல்லும் நுழைவாசலிலும் மற்றும் பேருந்து நிலையத்தினுள் இருந்து வெளி செல்லும் பாதையான பழைய லெட்சுமி தியேட்டர் பக்கத்திலும் ஆக ஐந்து வேகத்தடைகள் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டதன்படி, மேற்கண்ட பணிகளை ரூ.60,000/– மதிப்பீட்டில் பிரிவு .15 – ன் கீழ் உடனடியாக செய்து முடிக்கப்பட்டதை மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – அசவர அவசியத்தைக்கருதியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் பேரில் செய்யப்பட்ட ரூ.60,000/– மதிப்பீட்டில் பிரிவு .15 – ன் கீழ் செய்யப்பட்ட வேகத்தடை பணியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 12 – அனுமதிக்கப்பட்டது.**

4. நாகர்கோவில் நகராட்சியுடன் அருகிலுள்ள வளர்ந்து வரும் உள்ளாட்சிகளான ஆசாரிபள்ளம் பேரூராட்சி, பெருவிளை ஊராட்சி, கரிய மாணிக்கபுரம் ஊராட்சி, காந்திபுரம் ஊராட்சி மற்றும் வடக்கு சூரங்குடி ஊராட்சி ஆகிய ஐந்து உள்ளாட்சிகளையும் இணைத்து அரசாணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணை மற்றும் இது தொடர்பான அரசிதழ் அறிவிக்கையை ரத்து செய்யக்கோரி நோபிள்தாஸ் மோகன் என்பவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தற்போது மேற்படி வழக்கில் ஐந்தாம் பிரதிவாதியாக நகராட்சி ஆணையரை சேர்த்துள்ளார்.

மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் திரு.கே.மகேந்திரன் அரசு சிறப்பு வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும் வழக்கிடை செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண்.17168/2011/எப்.1

**தீர்மான எண் : 13 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.45 – ல் பொன்னப்ப நாடார் காலனியில் கழிவு நீர் ஓடையும், தார்தளமும் அமைக்கும் பணிக்கு ரூ.15,00,000/– ற்கு 26.02.2010 அன்று மின்னணு முறையில் ( E- Tendering) நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு.றி.மத்தியாஸ் – ற்கு வேலை உத்திரவு வழங்கி வேலை நடைபெற்று வரும் நிலையில்

மேற்படி சாலையில் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 2000– ம் ஆண்டில் நடைபெற்ற குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக குழாய்கள் பதிக்கப்பட்டது. அதன் பிறகு மேற்படி சாலை இதுவரை வேலை செய்யவில்லை. மேற்படி சாலையில் ஏராளமான மண் குவியல்கள் இருந்ததால் மேற்படி குழாய் பதித்த இடம் மதிப்பீடு தயாரிக்கப்படும் போது தெரியப்படவில்லை. அதனால் தற்போது வேலை செய்ய வேண்டி மண் மாற்றும் போது தான் குழாய் பதித்தது தெரிய வந்தது. மேற்படி குழாய் பதித்த பகுதியானது அதிக வாகனங்கள் சென்று நன்றாக இறுகிவிட்டபடியால் அதன்மீது Bituminuns Patch Work செய்து தார் தளமிடுவது போதுமானது. மேற்படி சாலை சுமார் 1200 மீட்டர் நீளம், அகலம் 1.20 மீட்டர் அகலத்திற்கு Bituminuns Patch Work செய்ய வேண்டியுள்ளது.

மேற்படி பணி செய்தால் தான் போக்குவரத்திற்கு கொண்டு வரமுடியும். எனவே பைப்லைன் பதித்த இடத்திற்கும் மீதமுள்ள இடத்திற்கும் சேர்த்து ஒட்டுப்பணியான Patch Work மட்டும் 133.24 m3 வருகிறது ஆனால் மதிப்பீட்டின்படி 50.00 m3 தான் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே கூடுதலாக 83.24 m3 – ற்கு Bituminuns Patch Work செய்தால் தான் சாலை தரமாக இருக்கும். எனவே மதிப்பீட்டைவிட கூடுதலாக 83.24 m3 தார் ஒட்டுப்பணி செய்ததற்கும் இதற்காகும் செலவு ரூ.1,30,270/– ஐ இதே மதிப்பீட்டில் செய்தமைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1, அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசியம் கருதி ஏற்கனவே பணி.செய்து வரும் ஒப்பந்தகாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணி செய்யப்பட்டமைக்கும் அதே மதிப்பீட்டில் தொகை ரூ.1, 30,270/– செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.285/2009–2010

**தீர்மான எண் : 14 – அனுமதிக்கப்பட்டது.**

6. நாகர்கோவில் நகராட்சி வார்டு எண்.26, ஆசாரிபள்ளம் ரோடு கதவு எண்.5 எ2, வரிவிதிப்பு எண்.36039 கொண்ட கட்டிடத்திற்கு வரி குறைவு செய்ய கோருதல் சம்மந்தமாக கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் சி.சி.எண்.67/2011 – ம் படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராவதற்கும் அதற்கான வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.சி.சி.எண்.67/2011/அ2

**தீர்மான எண் : 15 – அனுமதிக்கப்பட்டது.**

7. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49 ஜவஹர் தெரு, வரிவிதிப்பாளர் டாக்டர்.சுரேந்திரன் வரிவிதிப்பு எண்.75875 – கட்டிடத்திற்கு சொத்துவரி அதிகமாக உயர்வு செய்யப்பட்டதாக மாண்புமிகு சென்னை உயர்நிதிமன்ற மதுரைகிளையில் W.P. (M.D.) No.10415/11 எண்ணாக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கு நடத்தவும் அதற்கு ஆகும் செலவு கட்டணத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சி சார்பில் திருமதி.ஸ்ரீமதி வழக்கறிஞர் மூலம் வழக்கு நடத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5071/2009/அ9

**தீர்மான எண் : 16 – அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் றி.என்.74 டி 7817 – ல் தனியாக பொருத்தப்பட்டுள்ள எஞ்சின் பழுது நீக்கி புதிய குழாய்கள் பொருத்தி சீர் செய்திட 20.09.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

| | |
|---|---|
| 1. மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | – ரூ.9,525/– |
| 2. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | – ரூ.10,340/– |
| 3. கே.எஸ்.எஸ்,ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில் | – ரூ.10,000/– |

<u>அலுவலக குறிப்பு –</u> 1. மேற்படி வரப்பெற்ற மூன்று எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.9525/– க்கு கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

2.எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலை கருதி குடிநீர் லாறியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழஙகியதை அனுமதிக்கலாம்.

கோப்.பு எண்.8017/2008/இ3

**தீர்மான எண் : 17 – அனுமதிக்கப்பட்டது.**

9. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.வளன் சந்தாயாகு தீபக் என்பவரின் பிறந்த தேதி மற்றும் பெயர் மாற்றம் செய்ய தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்.ஒ.எஸ்.458/2011 இவ்வழக்கு நகராட்சி சார்பாக எடுத்து நடத்த நகராட்சி வழக்கறிஞர் திருமதி.எஸ்.எஸ்.ரெஜினிதேவி அவர்களுக்கு உத்திரவுக்கும் மற்றும் மேற்படி வழக்கு தொடர்பாக ஏற்படும் அனைத்து செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.018141/2011/எச்.3

**தீர்மான எண் : 18 – அனுமதிக்கப்பட்டது.**

10. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31 – ல் அமைந்துள்ள நாகராஜாகோவிலில் சூரசம்ஹார திருவிழா 31.10.2011 அன்று நடைபெற உள்ளதால் பொதுமக்கள் வசதிக்காக கோவிலின் முன்புறம் நகராட்சிக்கு சொந்தமான வளாகத்தை சுத்தப்படுத்தி, கிரசர்தூள்போட்டு சமப்படுத்தி சீர் செய்ய ரூ.50,000/– செலவு செய்ய, நகர்மன்றத்தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று செலவு செய்யப்பட்டது. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவு செய்யப்பட்ட தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – நகர்மன்றத்தமைலவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவு செய்யப்பட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.19271/2011/இ1

**தீர்மான எண் : 19 – அனுமதிக்கப்பட்டது.**

11. நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.வளன் சந்தியாகு தீபக் என்பவர் பிறந்த தேதி மாற்றம் மற்றும் குழந்தையின் பெயர் மாற்றம் செய்ய தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்.ஒ.எஸ்.458/2011 இவ்வழக்கு நகராட்சி சார்பாக எடுத்து நடத்த நகராட்சி வழக்கறிஞர் திருமதி.எஸ்.எஸ்.ரெஜினிதேவி 10.10.2011 அன்று உத்திரவு வழஙகப்பட்டது. மேற்படி வழக்கறிஞர் வழக்கு முன் செலவு தொகையாக ரூ.1500/– வழஙக 28.10.2011 தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே தற்போது முன் பணமாக ரூ.1000/– வழஙக மற்றும் வழக்குக்கான அனைத்து செலவினஙகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.. கோப்புஎண்.018141/2011/எச்.3

**தீர்மான எண் : 20 – அனுமதிக்கப்பட்டது.**

12. நாகர்கோவில் ஒழுகினசேரி பறக்கைகால் கதவு எண்.102 – ல் முத்து , த/பெ.சிவன் அடியார் என்பவரின் இறப்பு பதிவு செய்ய தொடர்பாக வழக்கறிஞர் திரு.எஸ்.சுரேஷ்குமார் எம்.எஸ்.ரோடு கிருஷ்ணன்கோவில் , நாகர்கோவில் என்பவர் நகராட்சி ஆணையர் அனுப்பிய நோட்டீஸ்–க்கு பதில் அனுப்ப நகராட்சி வழக்கறிஞர் திருமதி.எஸ்.எஸ்.ரெஜினிதேவி 21.09.2011 அன்று உத்திரவு வழஙகப்பட்டது. அதற்கு மேற்படி வழக்கறிஞர் திரு.எஸ்.சுரேஷ்குமார் பதில் அனுப்பிய நோட்டீஸ்– க்கு செலவு தொகையாக ரூ.500/– வழஙக 28.10.2011 தேதியை கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவு தொகை ரூ.500/– திருமதி.எஸ்.எஸ்.ரெஜினிதேவி– க்கு வழஙக மற்றும் வழக்குக்கான அனைத்து செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.16370/2011/எச்.3

**தீர்மான எண் : 21 – அனுமதிக்கப்பட்டது.**

13. பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மற்றும் சாக்கடை மண் அகற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 19.10.2011, 20.10.2011 மற்றும் 21.10.2011 தியதிகளில் பெறப்படும் என நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் 21.09.2011 – ல் உள்ளாட்சி தேர்தலுக்கான அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டதால் தேர்தல் விதிமுறைகள் அன்றே தேதியில் அமுலுக்கு வந்ததால் மேற்படி தினஙகளில் பெறப்படும் ஒப்பந்தள்ளிகள் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது,

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளிகள் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டதற்கும் விளம்பரம் செய்த விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விளம்பரம் செய்த பத்திரிக்கை மற்றும் பில் எண் | பத்திரிக்கை வெளியாகும் இடம் | தேதி | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.<br>11520 | சென்னை | 21.09.2011 | 11,280/– |
| 2 | தினத்தந்தி<br>NGL 0208895 | நாகர்கோவில் | 21.09.2011 | 3,024/– |
| 3 | எக்ஸ்பிறஸ் பப்ளிகேஷன்<br>IAF /21487 | திருநெல்வேலி | 21.09.2011 | 4,680/– |
| 4 | மாலைமலர்<br>NGL 011090238 | நாகர்கோவில் | 21.09.2011 | 2,244/– |
| 5 | தினமலர்<br>6 & 99 | நாகர்கோவில் | 21.09.2011 | 2,700 |
| 6 | மக்கள் குரல்<br>தினத்தந்தி | சென்னை | 30.09.2011 | 1, 42, 130/– |
| 7 | மாலை முரசு<br>தினபூமி<br>4643 | சென்னை | 30.09.2011 | 23,713/– |
| 8 | மக்கள் குரல்<br>தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.<br>4690 | சென்னை | 21.10.2011 | 16,328/– |

மேற்படி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு மொத்த தொகை ரூ.2,74,676/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.15700/2011/ எச்.1

**தீர்மான எண் : 22 – அனுமதிக்கப்பட்டது.**

14. நாகர்கோவில் நகராட்சியில் இ – டெண்டர் பயன்பாட்டிற்கான அலுவலர்களுக்கான DSC கார்டுகள் மாற்றலாகி வந்த 4 அதிகாரிகளுக்கும் SCS Corporate Solutions India Private Limited, Chennai மூலம் கார்டுகள் வாஙகவும் அதற்கான செலவுத்தொகை ரூ.9600/– ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழஙக மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.4340/2009/இ4

**தீர்மான எண் : 23 – அனுமதிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சி வாகனம் றி.என்.74 ஜே 2839 – ல் ஆயில் , ஆயில் பில்டர், டீசல் பில்டர் புதியதாக மாற்றி பராமரிப்பு செய்தல் பணியை ஆனைமலைஸ் ஏஜென்ஸீஸ் லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தில் நேரடியாக செய்திடவும் உத்தேச செலவுத்தொகை ரூ.7000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5021/2006/இ3

**தீர்மான எண் : 24 – அனுமதிக்கப்பட்டது.**

16. இந்நகராட்சி வாகனம் றி.என்.74 டி 2037 – க்கு தகுதி சான்று பெற்றிட உத்தேச செலவுத்தொகை ரூ.12,000/– ல் கீழ்க்கண்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

வேலைகள் விபரம்

1. எஞ்சின் ஆயில் கியர் ஆயில் மாற்றுதல்
2. டிஙகர் வேலை செய்தல்
3. முன்புற வின்ட்ஸ்கிரின் கிளாஸ் மாற்றுதல்
4. முன்புற கிளாஸ் ரப்பர் மாற்றுதல்
5. முன்புற ஹெட்லைட் மாற்றுதல்
6. வாகனம் பெயிண்டிங செய்தல்
7. கியர் பாக்ஸ் ஆயில் சீல் மாற்றுதல்

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9081/2007/இ3

**தீர்மான எண் : 25 – அனுமதிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளும் மற்றும் பேருந்து நிலையத்திலுள்ள 21 Nos.S.V. விளக்குகள் ஆகியவற்றை ஒராண்டு ஒப்பந்தப்புள்ளி கோரி 573/05.08.2011 – ம் எண்ணாக நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டதில் ஓராண்டு என்பதை மூன்று ஆண்டாகவும் மாற்றி மறு ஒப்பந்தப்புள்ளிக் கோரவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஆசாரிப்பள்ளம் பேரூராட்சி மற்றும் பெருவிளை, கரியமாணிக்கபுரம், வடக்கு சூரஙகுடி, காந்திபுரம் ஊராட்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் மூன்றாண்டு காலத்திற்கு ஆகும் பராமரிப்புத்தொகை உத்தேச மதிப்பீடு ரூ.1,10,00,000/– ( ஒரு கோடியே பத்து லட்சம் ) ஆகும் மன்ற ஒப்புதலுக்கு

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.11746/2011/இ4

**தீர்மான எண் : 26 – அனுமதிக்கப்பட்டது.**

18. இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணிகள் நிமித்தமாக வெளியூர் பயணம் சென்று வந்தமைக்கு கீழ்கண்ட விபரப்படி பயணப்படி வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி பயண தேதி | பயணம் மேற்கொண்ட இடம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திருமதி.பு.ஜானகி இரவீந்திரன்,<br>ஆணையர்<br>01.07.2011, 28.08.2011<br>(4916, 2256 ) | சென்னை | 7172.– |
| 2 | திரு.ஆ.ஜானகிராமன்<br>நகரமைப்பு அலுவலர்<br>02.08.2011, 05.09.2011<br>(8967, 4499 ) | சென்னை | 13466/– |
| 3 | திருமதி.மாணிக்க அரசி,<br>கணக்கர் | கோயம்புத்துார் | 2093/– |
| 4 | திரு.பி.மதியழகன்,<br>நகரமைப்பு ஆய்வர்<br>29.04.2011, 03.08.2011<br>(620, 1860, 270 ) | மதுரை | 2750/– |
| 5 | திருருகே.நாகராஜன்<br>மின்கம்பியாளர் | கோயம்புத்துார் | 880/– |
| 6 | திரு.ஞானப்பா,<br>இளநிலை உதவியாளர் | மதுரை | 2130/– |
| | | மொத்தம் | 28,481/– |

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்..4723/2011/பி1

**தீர்மான எண் : 27 – அனுமதிக்கப்பட்டது.**

19. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் கடிதம் ந.க.எண்.186/2010/சி2 நாள் 04.10.2011 – ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருநெல்வேலி அவர்கள் அலுவலக கணணி பிரிவு பயன்பாடடிற்கு புதியதாக 5 KVA- UPS ஒன்று வாஙகுவதற்கு இந்நகராட்சியின் பஙகு தொகையாக ரூ.8000/– வழஙக கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகை மேற் அலுவலகத்திற்காக M/s/Transcand Systems.மதுரை நிறுவனத்திற்கு வழஙகிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று தொகை வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.10532/2008/இ3

**தீர்மான எண் : 28 – அனுமதிக்கப்பட்டது.**

20. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட கோட்டார் புனித சவேரியார் ஆலய திருவிழா 24.11.2011 முதல் 03.12.2011 வரையிலும் நடைபெற உள்ளது. மேற்படி திருவிழாவினைக்காண மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் ஏராளமான பொதுமக்கள் வருகை தருவதால் அவர்களுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுக்க தேவையான தளவாட சாமானஙகளுக்கு கிருமி நாசினி வழஙகவும் மற்றும் தற்காலிக கழிப்பிட ஒலைக்கூரை அமைக்கவும் மற்றும் 24.11.2011 முதல் 04.11.2011 வரை துப்புரவு பணி மேய்கொள்ள 20 தற்காலிக துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்மானம் செய்த ஊதியத்தில் நியமித்து ஊதியம் வழஙகவும் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் 18.11.2011 அன்று கோரப்பட்டடன. வரப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் பி வருமாறு.

| வ. எண். | பொருள் விபரம் | ஸ்ரீபாலாஜி ஏஜென் ஸீஸ் | பி.எஸ். டிரேடர்ஸ் | SKY &Co | உலமா பார்மா (வரி தனி) | வசந்தா பார்மா ( வரி தனி) | வினோந்த பார்மா (வரி தனி) | குறைந்த விலைப் புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கருப்பு பினாயில் | 45.00 | 85.00 | 45.00 | 51.00 | 47.00 | 49.00 | 45.00 |
| 2 | வெள்ளை பினாயில் | 40.00 | 65.00 | 80.00 | 45.00 | 40.00 | 42.00 | 40.00 |
| | | பாலாஜி | பி.எஸ் .டிரேடர்ஸ் | Sky & Co | எஸ்.ராஜ கோபால் | இ.சிவ லிஙகம் | பி.எ.ஸ. சாகுல் ஹமீது | குறைந்த விலைப் புள்ளி |
| 3 | சுண்ணாம்பு | 9.00 | 15.00 | 20.00 | 6.00 | 5.75 | 6.25 | 5.75 |
| | தளவாட சாமான்கள் | பாலாஜி | பி.எஸ் .டிரேடர்ஸ் | Skyl Co | | | | |
| 4 | கூடை 1 எண்ணம் | 245.00 | 285.00 | 310.00 | – | – | – | 245.00 |
| 5 | மூஙகில் மாறு 1 எண்ணம் | 160.00 | 180.00 | 190.00 | – | – | – | 160.00 |
| 6 | சிறிய மாறு 1 எண்ணம் | 15.00 | 20.00 | 23.00 | – | – | – | 15.00 |
| 7 | ரப்பர் கூடை 1 எண்ணம் | 95.00 | 99.00 | 105.00 | – | – | – | 95.00 |
| 8 | மண்வெட்டி ( வாள் ) | 375.00 | 400.00 | 410.00 | – | – | – | 375.00 |
| 9 | களை மண்வெட்டி 1 எண்ணம் | 205.00 | 305.00 | 325.00 | – | – | – | 205.00 |
| 10 | இரும்பு அகப்பை 1 எண்ணம் | 180.00 | 195.00 | 205.00 | – | – | – | 180.00 |
| 11 | பிளீச்சிங பவுடர் 1 கிலோ | 30.00 | 38.00 | 45.00 | – | – | – | 30.00 |
| | பந்தல் அமைப்பு | மணி கண்டன் | எஸ்.கிருஷ் ணன் | நாக ராஜன் | கே.. கோலப் பன் | – | – | குறைந்த விலைப் புள்ளி |
| 12 | சேமிப்பு அறை (10' x 10' ) | 3000 | 2900 | 1600 | 2100 | – | – | 1600 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | சிறுநீர் கழிப்பிடம் (2 எண்ணம் (10' x 10' ) | 9500 | 8500 | 10500 | 8850 | – | – | 8500 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் கருப்பு பினாயில் மற்றும் வெள்ளை பினாயில் ஆகியவற்றை குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீபாலாஜி ஏஜென்ஸியிடமும், நீத்திய சுண்ணாம்பினை குறைந்த விலைபுள்ளி அளித்துள்ள திரு.இ.சிவலிங்கத்திடமும், தளவாட சாமான்கள் மற்றும் பிளீச்சிங பவுடர் ஆகியவற்றை குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீபாலாஜி ஏஜென்சியிடமும், தற்காலிக ஓலை கூரை அமைக்க ( சேமிப்பு அறைக்கு ) குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.நாகராஜனுக்கும் தற்காலிக ஓலைக்கூரை ( சிறுநீர் கழிப்பிடம் 2 எண்ணம் ) அமைக்க குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணன் அவர்களுக்கும் வினியோக உத்தரவும் மற்றும் வேலை செய்ய உத்தரவும் வழஙக மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. வரப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த தொகை கொடுத்துள்ள நிறுவனத்திற்கு வினியோக உத்தரவும் மற்றம் வேலை செய்ய உத்தரவும் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. தேவையான தற்காலிக துப்புரவு பணியாளர் நியமனம் செய்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்ணயம் செய்த ஊதியத்தை வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

4. மேலும் மேற்கண்ட இனஙகளுக்கு உரிய தொகையினை வழஙகவும், மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.20279/2011/எச்.1

**தீர்மான எண் : 29 – அனுமதிக்கப்பட்டது.**

21. இந்நகராட்சி வாகனம் றி.என்.74 M -.3406 – க்கு 25000 கி.மீ. இயக்கப்பட்டதற்கான பராமரிப்பு பணியினை நாகர்கோவில் Saj ஆட்டோ கார், மகேந்திரா நிறுவனத்தில் நேரடியாக செய்யவும், உத்தேச செலவினம் ரூ.4000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.624/2011/இ3

**தீர்மான எண் : 30 – அனுமதிக்கப்பட்டது.**

22. இந்நகராட்சி வாகனம் றி.என்.74 2093 – க்கு தகுதிச்சான்று பெறுவதற்கு கீழ்க்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச செலவுத்தொகை ரூ.12,000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>பணிகள் விபரம்</u>

1. வாகனம் சர்வீஸ் செய்தல்
2. நான்கு வீல் கிரிஸ் பேக்கிங செய்தல்
3. நான்கு வீல் பக்கட் மாற்றுதல்
4. எஞ்சின் ஆயில் மாற்றுதல்
5. ஆயில் பில்டர் மாற்றுதல்
6. டீசல் பில்டர் மாற்றுதல்
7. கியல் ஆயில் மாற்றதல்
8. எலக்ட்ரிக் செக்கப் செய்தல்
9. வாகனம் பெயிண்டிங செய்தல்

**<u>அலுவலக குறிப்பு</u>** – அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 31 – அனுமதிக்கப்பட்டது.**

கோப்பு எண்.1393/2007/இ3

23. நகர்மன்ற தீர்மானம் எண்.195 நாள் 25.02.2011 – ன் படி இந்நகராட்சி 25 வார்டுகள் மற்றும் ஊராட்சி பகுதியிலிருந்து இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்ட வார்டுகளிலும் குப்பைகள் மற்றும் சாக்கடை மண் அப்புறப்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 6 மாத காலத்திற்கு 01.06.2011 முதல் திரு.கே.பொன்சேகர் தனியார் ஒப்பந்ததாரரிடம் பணி மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆணையரது பணி உத்தரவு ந.க.எண்.13013/2010/எச்.1 நாள் 25.05.2011 – ன் படி பணி செய்ய அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்காலம் 30.11.2011 அன்று முடிவடைகிறது. புது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அக்டோபர் மாதத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைமுறை விதிகள் நடைமுறைக்கு வந்ததால் புது ஒப்பந்தப்புள்ளி கோரியதை மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது. எனவே மேற்படி குப்பைகள் மற்றும் சாக்கடை மண் அப்புறப்படுத்தும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஒப்படைக்க கால அவகாசம் தேவைப்படுவதால் பொதுமக்களின் பொதசுகாதார அவசர அவசியத்தைக் கருத்திற்கொண்டு துப்புரவு பணியில் தொய்வு ஏற்படாத வண்ணம் மேற்படி திரு.கே.பொன்சேகர் தனியார் திடக்கழிவு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை மேலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஒப்படைக்கும் வரை 01.12.2011 முதல் இரண்டு மாத காலத்திற்கு பழைய ஒப்பந்தப்புள்ளி தொகையினையை நீட்டிப்பு செய்யவும், மேலும் இந்நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள ஊராட்சி பகுதியும் உட்பட்ட அனைத்து பகுதிகளில் கூடுதலாக திடக்கழிவு மற்றும் சாக்கடை மண் அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் கூடுதல் செலவினத்திற்கும் மேற்படி பணியை ஒப்பந்ததாரர் திரு.கே.பொன்சேகருக்கு பழைய தொகையிலேயே பணி உத்தரவு வழஙகிடவும் மன்ற அனுமதி கோரி மன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.15700/2010/எச்.1

**தீர்மான எண் : 32 – அனுமதிக்கப்பட்டது.**

24. இந்நகராட்சிக்கு எல்கைக்குட்பட்ட கோட்டார் புனித சவேரியார் கோவில் திருவிழா 24.11.2011 முதல் 03.12.2011 வரை நடைபெற உள்ளதனை முன்னிட்டு, மேற்படி தினங்களில் சாலை ஓரஙகளில் அமைக்கப்படும் 5'x 5' அளவுள்ள ஸ்டால்களுக்கு நாளொன்றிற்கு ரூ.30/– வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ( அரசு மருத்துவமனை தென்புறத்திலிருந்து கோட்டார் ஈத்தாமொழி ரோடு வரை மற்றும் செட்டிக்குளம் சந்திப்புகிழக்கு பக்கத்திலிருநூது சவேரியார் கோயில் வரை ( பயோனியர் முத்து மகால் வாயில் பகுதி மற்றும் கோயில் நுழைவு வாயில் பகுதி நீஙகலாக) ஒப்படைக்க நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வழி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 16.11.2011 அன்று கோரப்பெற்றதில் எவரும் ஏலத்திற்கான பொறுப்பு தொகை செலுத்தப்படவில்லை. ஆனால் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. மேற்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | திரு.எம்.என்.அப்துல் ரகீம் | 8,50,555/– |
| 2 | திரு.லூார்து பாபு | 7,77,777/– |
| 3 | திரு.எ.ஜெயபாலன் | 6,28,800/– |
| 4 | திரு.சி.எல்.ஜோ | தொகை குறிப்பிடப்படவில்லை |
| 5 | திரு.ஜே.இம்ரான்கான் | 3,50,000/– |
| 6 | திரு.ஆர்.சதாசிவன் | 7,77,707/– |
| 7 | திரு.எல்.பெஞ்சமின் | 7,55,001/– |
| 8 | திரு.கணபதி ராமலிஙகம் | 5,77,777/– |

**அலுவலக குறிப்பு** – 1. நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

2. வரப்பெற்ற உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியான திரு.எம்.என்.அப்துல் ரகீம் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,50,555/– ஆனது கடந்த ஆண்டு உரிமம் ஒப்படைக்கப்பட்ட தொகை ரூ.5,55,000/– மற்றும் மூன்றாண்டு சராசரி ரூ.3,68,938/– ஐ காட்டிலும் அதிகம் என்பதாலும் மன்ற அனுமதி பெற போதிய கால அவகாசம் இல்லாததால் அவசர அவசியம் கருதி உரிமம் ஒப்டைக்க நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

3. மேற்படி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வழி தினசரி நாளிதழில் நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெறப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டமைக்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.19682/2/11/அ13

**தீர்மான எண் : 33 – அனுமதிக்கப்பட்டது.**

25. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட இருக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு முதல் கட்டணமாக ரூபாய்.**76.04** கோடி ரூபாயில் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு UIDSSMT திடடத்தின் கீழ் நிதி விடுவிப்பு செய்ய CPHEEO NEW DELHI அவர்களால் **16.09.2010**–ல் ஒப்புதல் வழஙகப்பட்டு **27.09.2010**–ல் நடைபெற்ற மாநில அளவிலான ஒப்பளிப்பு கமிட்டியில் (SLSC) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.**17** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு (தேர்தல் ) துறை நாள் **14.01.2011** –ன் படி நகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு ஆசாரிபள்ளம் பேரூராட்சி, பெருவிளை ஊராட்சி, வடக்கு சூரஙகுடி ஊராட்சி, காந்திபுரம் ஊராட்சி மற்றும் கரியமாணிக்கபுரம், ஊராட்சிகளையும் சேர்த்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால்
மேற்கண்ட பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து பாதாள சாக்கடை செயல்படுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தில் (TUFIDCO) இருந்து கடிதம் எண். TUFIDCO /TIFS/TUF336/M(Rd)/11 நாள் **01.11.2011**–ன் படி திட்ட மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl No | Name of the Project | Period of implementation | SLSC sanctioned Amount | Administrative sanctioned | Revised DPR cost | Gap funding | Fund tie up to be made from | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | TUFIDCO by getting loan | O&M Gap Filling fund | | | Infra Gap filling fund | | | Special urban development mission | Probable date of completion |
| | | | | | | | | 2011 12 | 12-13 | 13-14 | 2011 12 | 12-13 | 13-14 | | |
| 1. | Nagercoil UGSS | 36 months | 65.56 | - | 76.02 | 10.46 | 2.00 | - | - | - | - | - | - | 8.46 | Feb 15 |

மேற்கண்ட நிதி ஆதார அடிப்படையில் நாகர்கோவில் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்தவும் மேற்கண்ட பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்த தேவையான தொகையை பெறுவதற்கு தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் அல்லது ஏதேனும் அரசு நிதிகளில் கடனாகவோ / மானியமாகவோ பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபபடுகிறது.‘

<u>அலுவலக குறிப்பு :</u>

1 திருத்திய விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம். இதற்கு மத்திய மாநில அரசிடமிருந்து மானியமாக நிதி பெறலாம்

2 பாதாள சாக்கடை திட்டம் தொய்வின்றி நடைபெற தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் மேற்படி தொகைகளை கடனாக பெற்றும் வைப்புத்தொகையை பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டு திருப்பி செலுத்த ஒப்புதல் வழஙகலாம்

3 தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) அல்லது ஏதேனும் அரசு நிதிகளில் கடனாகவோ / மானியமாகவோ பெறுவதற்கு மன்றம் அனுமதி வழஙகலாம். அவ்வாறு கடன் கிடைக்காத பட்சத்தில் மானியம் அளிக்கவும் அரசை கோரலாம்

4 மேற்படி நிதி நிறுவனத்திலிருந்து கடன் அல்லது மானியம் பெறுவதற்கு நகராட்சி ஆணையர் ஒப்பமிட அதிகாரம் அளித்து அனுமதி வழஙகலாம்

5 பாதாள சாக்கடை திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்தவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

6. மேற்கண்டவைகளுக்கு மன்றம் முன் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.7786/2003/எப்.1

**தீர்மான எண் : 34 – அனுமதிக்கப்பட்டது.**

26. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். ( பழைய வார்டு எண்.41 ) பறக்கை ரோடு சந்திப்பு அரசு தொடக்கப்பள்ளி அருகில் இசஙகன்விளையில் புதியதாக ஆழ்குாய் கிணறு அமைத்து குடிநீர்த் தொட்டி ரூ.1,50,000/– ற்கு அமைப்பதற்கு 15.09.2011 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. திரு.எஸ்.தெய்வசாமி (–) 2.08 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.எ.நாகராஜன் (+) 6. 69 % மதிப்பீட்டைவிட கூடுதல்

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அனுமதிக்கலாம்.

2. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.தெய்வசாமி (–) 2.08% மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3. நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி நாள் 02.08.2011 – ல் ரூ.1,50,000/– ற்கு டெண்டர் கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.113 எ /2011– 2012

**தீர்மான எண் : 35 – அனுமதிக்கப்படவில்லை.**

27. இந்நகராட்சிக்குட்பட்ட கீபழ்க்கண்ட 6 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல், கிணறு பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.51,350/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | வார்டு எண்.9 பறக்கிஙகால் பண்ட் கழிவறை வாட்டர் சப்ளை ஸ்கீம் | ரூ. |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்ட்டர் பழுது பார்த்து இயக்குதல் | 7900.00 |
| II | வார்டு எண்.9 ஒழுகினசேரிஆராட்டுரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( ரைஸ்மில் பக்கம்) | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்ட்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8750.00 |

| | | |
|---|---|---|
| III | வார்டு எண.9 ஒழுகினசேரி வெள்ளாளர் கீழத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( ( முக்கு) | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8050.00 |
| IV | வார்டு எண்.19 வெள்ளாடிச்சிவிளை போர்செல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8700.00 |
| V | வார்டு எண்.30 வடசேரி ராஜபாதை கல்படித்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8750.00 |
| VI | வார்டு எண்.32 கணேசபுரம் கிணறு வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 5 குதிரைவேக மானோபிளாக் பம்பு செட் மோட்டார், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 9200.00 |
| | மொத்தம் | 51,350.00 |

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.021769/2011/இ2

**தீர்மான எண் : 36 – அனுமதிக்கப்பட்டது.**

28. இந்நகராட்சிக்குட்பட்ட கீபழ்க்கண்ட 6 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல், பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்து இயக்க ஆகும் உத்தேச செலவு ரூ.56,800/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | வார்டு எண்.5 வாத்தியார்விளை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | ரூ. |
| | பழுதுபட்ட 5 குதிரைவேக ( 6'') சப் மெர்சிபிள் பம்பு செட்டை துாக்கிவிட்டு புதிய 5 குதிரை வேக ( 6'') சப் மெர்சிபிள் பம்பு செட் இறக்கி இயக்குதல் மற்றும் ஸ்டார்டர், சுச்சு போர்டுகள் பழுது பார்த்தல் – | 8850.00 |
| II | வார்டு எண்.25 நெசவாளர் காலனி போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( டீ கடை பக்கம்) | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8200.00 |
| III | வார்டு எண்.40 தொல்லவிளை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 5 குதிரைவேக பம்பு செட்டின் 2'' டெலிவரி பைப் வால்வு மற்றும் டேங டெலிவரி பைப், வால்வு பழுதுபட்டுள்ளதை சரி செய்தல் | 5800.00 |
| IV | வார்டு எண்.42 கவுசிங போர்டு காலனி வாட்டர் சப்ளை ஸ்கீம் பம்பு ரூம்.எண்.2 | |
| | 7.5 குதிரைவேக மானோபிளாக் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் மற்றும் | 13250.00 |

| | | |
|---|---|---|
| V | வார்டு எண்.47 கணபதி நகர் போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( சத்துணவு கூடம் பக்கம் ) | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8350.00 |
| VI | வார்டுஎண்.47 எம்.ஜி.ஆர்.நகர் போர்வெல் வாட்டர்சப்ளை ஸ்கீம் | |
| | 1 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் மற்றும் பழுதுபட்ட பைப் மாற்றுதல் | 12350.00 |
| | மொத்தம் | 56800.00 |

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.021770/2011/இ2

**தீர்மான எண் : 37 – அனுமதிக்கப்பட்டது.**

**29.** இந்நகராட்சிக்குட்பட்ட கீபழ்க்கண்ட 5 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல், பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்து இயக்க ஆகும் உத்தேச செலவு ரூ.42,550/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | வார்டு எண்.7 கலுஙகடி எல்.எம்.எஸ்.காம்பவுண்ட் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | ரூ. |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8800.00 |
| II | வார்டு எண்.7 கீழகலுஙகடி கீழத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8500.00 |
| 111 | வார்டு எண்.14, கோட்டார் பரதர்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8300.00 |
| IV | வார்டு எண்.30 வடசேரி லட்சமிபுரம் வடக்குத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1 குதிரைவேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8450.00 |
| V | வார்டு எண்.30, வடசேரி தாணுமாலையன் புதுத்தெரு, போர்வெல் வாட்டர்சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8500.00 |
| | மொத்தம் | 42,550.00 |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.021771/2011/இ2

**தீர்மான எண் : 38 – அனுமதிக்கப்பட்டது.**

**30.** இந்நகராட்சிக்குட்பட்ட கீபழ்க்கண்ட 5 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல், பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.55,050/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | வார்டு எண்.4 தெலுங்கு செட்டித்தெரு பனவிளை தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | ரூ. |
| | 3 குதிரை வேக (4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 13100.00 |
| II | வார்டு எண்.4 கிரவுண் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( மாமூடு) | |
| | 3 குதிரைவேக ஸ்டார்டர் சுச்சுபோர்டு பழுது பார்த்து இயக்குதல் | 3500.00 |
| III | வார்டு எண்.27, ஹென்றிரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரை வேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | 12350.00 |
| IV | வார்டு எண்.42 மேல சூரங்குடி வாட்டர் சப்ளை ஸ்கீம் போர்வெல் எண்.I | |
| | 5 குதிரைவேக ( 6'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் மற்றும் பழுதுபட்ட 2'' ஜீ யை பைப் மாற்றி புதிய 2'' பி.வி.சி.பைப் பொருத்துதல் மற்றும் மெயின் சுச்சு, பியூஸ் யூனிட் மாற்றுதல் மற்றும் | 17950.00 |
| V | வார்டு எண்.47 செட்டிக்குளம் டேவிட் காம்பவுண்ட் தெரு கிணறு வாட்டர்சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரை வேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | 8150.00 |
| | மொத்தம் | 55,050.00 |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.021772/2011/இ2

**தீர்மான எண் : 39 – அனுமதிக்கப்பட்டது.**

31. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட 4 இடங்களிலுள்ள குடிநீர் போர்வெல் பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்து இயக்க ஆகும் உத்தேச செலவு ரூ.36,400/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | வார்டு எண்.4 பள்ளிவிளை மிஷன் காம்பவுண்ட் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( சி.எஸ்.ஐ.சர்ச்.பக்கம் ) | ரூ. |
| | 3 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 10700.00 |
| II | வார்டு எண்.37 அண்ணா பஸ் ஸ்டாண்ட் பொது கழிப்பிடம் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( வடக்கு பக்கம் ) | |
| | 1.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8800.00 |
| III | வார்டு எண்.22 கீழமறவன் குடியிருப்பு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரை வேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8600.00 |
| IV | வார்டு எண்.29 புதுக்குடியிருப்பு சுபாஸ்தெரு போர்வெல் வாடடர் சப்ளை ஸ்கீம் | |
| | 1 குதிரை வேக ( 4'') சப் மெர்சிபிள் பம்பு செட் மற்றும் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8300.00 |
| | மொத்தம் | 36,400.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>** – அனுமதிக்கலாம். கோப்பு எண்.021773/2011/இ2

**தீர்மான எண் : 40 – அனுமதிக்கப்பட்டது.**

32. நாகர்கோவில் நகராட்சிப் பொது சுகாதாரப்பிரிவு வாகனம் றி.என்.74 எல்.5137 – க்கு 3 டயர்களும் மற்றும் டியூப்களும் பழுதடைந்துள்ளதாக ஓட்டுனர் வாகன பொறுப்பு ஆய்வாளர் வழி 09.11.2011 – ல் அறிக்கை செய்துள்ளார். மேற்படி வாகனம் 2007 – ல் வாஙகப்பட்டது. 19.05.2011 – ல் மேற்படி வாகனத்திற்கு 4 டயர்களும் டியூப்களும் புதியது வாஙகி பொருத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு நாளது தேதி வரை மாற்றப்படாத 3 டயர்களும் மற்றும் டியூப்களுக்கும் உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரி வாஙகி மாற்றவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.33,000/– ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.10032/2010/எச்.2

**தீர்மான எண் : 41 – அனுமதிக்கப்பட்டது.**

33. நாகர்கோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகளை நகராட்சி உரக்கிடஙகில் அப்புறப்படுத்தப்படும் பணிக்கு நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பிவாகனம் றி.என்.74 – 3116 பயன்பட்டு வருகிறது. நகராட்சி உரக்கிடஙகில் கழித்த 5 –6 வருடதில் சேகரிப்படும் கழிவுகள் விற்பனையாகாத காரணத்தால் கழிவுகள் அதிகமாக தேஙகியுள்ளது. தினமும் சேகரித்து கொட்டப்படும்கழிவுகளை மேற்படி வாகனத்தை பயன்படுத்தி குவியலாக குவித்து வைக்கப்பட்டால் மட்டுமே வரப்படும் கழிவுகளை சேகரித்து வைக்கப்படும். ஆனால் தற்போது மேற்படி வாகனம் பழுதடைந்து ஓடாத நிலையில் உள்ளதாலும் வரப்படும் கழிவுகளை குவியலாக்க முடியாத நிலையில் உள்ளதாலும் கழிவுகளை கொட்டப்படாமல் சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே இதனை பொறியாளர் தனது 21.11.2011 – ம் தேதிய குறிப்பில் மேற்படி வாகனம் வாஙகப்பட்டநிறுவனம் மூலம் வேலை செய்ய சிபாரிசு செய்துள்ளார். எனவே இவ்வாகனத்திற்கு ஆயில்கள் மாற்றவும் பில்டர்கள் தேய்ந்துவிட்டதால் அதனை மாற்றி சரி செய்யவும் மேலும் இவ்வாகனத்திற்கு சில பழுது வேலைகள் ஏற்பட்டுள்ளதை வாகனம் வாஙகிய நிறுவனம் ( ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்ஸி ) மூலம் சரி செய்யவும் அதற்கான உத்தேச செலவு ரூ.2,60,538/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மேற்படி வாகனம் கலவை உரக்கிடஙகில் தினமும் ஏற்படும் திடக்கழிவுகளை குவியலாக பயன்படுத்தப்படும் வாகனமாகும். இவ்வாகனம் ஓடாத நிலை ஏற்பட்டால் தினமும் வரப்படும் திடக்கழிவுகளை குவியலாக்க முடியாமல் இட நெருக்கடி ஏற்பட்டு கழிவுகளை கொட்ட முடியாத நிலை ஏறபடும். இந்நிலையில் வாடகைக்கு வாகனம் ஏற்பாடு செய்தால் அதிகமாக தொகை செலவு ஏற்படும். மேலும் இவ்வாகனத்திற்கு ஏற்பட்ட பழுதினை சரி செய்ய வேறு நிறுவனம் இல்லாத காரணத்தால் அதனை மேற்படி வாகனம் வாஙகப்பட்ட ஜெயராஜ் ஆடடோமொபைல்ஸ் மூலம் வேலை செய்ய பொறியாளர் சிபாரிசு செய்துள்ளார். எனவே அவசர அவசியம் மற்றும் பொது சுகாதார நலன் கருதி மேற்படி பழுதினை சம்மந்தப்பட்ட நிறுவனம் மூலம் பழுது பார்க்கவும் ஆயில் மாற்றவும் அனுமதி வழஙகலாம்..

கோப்பு எண்.16393/2011/எச்.2

**தீர்மான எண் : 42 – அனுமதிக்கப்பட்டது.**

34. நாகர்கோவில் நகராட்சி சொர்ண ஜெயந்தி திட்டம் SJSRY 2011–2012 பல்வேறு அலகிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரது கடித ந.க.எண்.12919/2011/UPA – 3 நாள் 16.06.2011 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் – திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.3122/2011/சி1 நாள் 24.06.2011 ஆகிய கடிதங்களின் பிரகாரம் SJSRY திட்ட அலகிற்கு ஒதுக்கீடு தொகையாக ரூ.50,25,702/– பெறப்பட்டு அதற்கான மன்ற அனுமதி எண்.620 நாள் 05.09.2011 – ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி தொகையானது திருத்திப் பெறப்பட்டுள்ளதின் ( ரூ.77,63,225/– ) விபரம் பின்வருமாறு.

| Sl. No. | Schme Name | Amount Alloted | SC/ST | | Minority | | General | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Phy | Financial | Phy | Financial | Phy | Financial |
| 1 | USEP (Subsidy | 1138943 | 5 | 227788 | 4 | 170841 | 15 | 24 |
| 2 | UWSP ( Group loan0 | 854214 | - | - | - | - | - | - |
| 3 | UWSP (TCS) | 284738 | - | - | - | - | - | - |
| 4 | STEP-UP (Training ) | 2696400 | 54 | 432000 | 41 | 328000 | 175 | 270 |
| 5 | UWEP | 1638350 | 655 | 131068 | 491 | 98301 | 2131 | 3277 |
| 6 | UCDN | 569476 | - | 113895 | - | 85421 | - | - |
| 7 | A & OE (5%) | 363195 | - | - | - | - | - | - |
| 8 | IEC (3%) | 217909 | - | - | - | - | - | - |
| | Total | 7763225 | - | - | - | - | - | - |

மொத்த ஒது;க்கீடு தொகையாக 2011–2012 – க்கு ரூ.77,63,225/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், அந்த தொகை நகராட்சியில் பெறப்பட்டவுடன் மக்களுக்கு பயன்பெறும் வகையில் அரசு SJSRY புதிய வழிகாட்டுதலின்படி நகராட்சி சமுதாய அமைப்பாளர்களின் வழியாக மேற்கண்ட அலகிற்குரிய விண்ணப்பங்கள் பெற்று தொடர்பு அலுவலர் (SJSRY) வழியாக நடைமுறைப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. மன்றம் அனுமதி வழஙகலாம்.

2. 01.04.2009 SJSRY புதிய வழிகாட்டுதலின்படி சமுதாய அமைப்பாளர்களின் வழியாக நடைமுறைப்படுத்தலாம்.

3. வறுமை ஒழிப்புப் பிரிவிற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

கோப்பு எண்.11227/2011/ எச்.5

**தீர்மான எண் : 43 – அனுமதிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சிக்குட்பட்ட வடலிவிளை புல எண்.எம்.4/14–8 – ல் சுபாஷ், சுரேஷ் மற்றும் சேது என்பவர்கள் கட்டிவரும் சுடுகாடு கொட்டகை கட்டிடத்தை கட்டக்கூடாது எனவும் மேற்படி கட்டிட கட்டிடத்தை அப்புறப்படுத்த வேண்டும் எனவும் கோரி வாதி சரவணன் மற்றும் கிருஷ்ணகிளி இருவரும் நகராட்சி ஆணையரை 4– ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து மாவட்ட முதன்மை நீதிமன்றத்தின் மூலம் ஒ.எஸ்.எண்.392/2011 – ன் படி வழக்கு தொடர்ந்துள்ளது. எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞரை ஆஜராகக் கேட்டும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும், வழக்கிடை செலவுகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.7162/2011/எப்.1

**தீர்மான எண் : 44 – அனுமதிக்கப்பட்டது.**

36. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி அவர்கள் கடிதம் எண். F.NGL/ TECH.038/09 நாள் 14.062011 – ன் படி இந்நகராட்சிப் பகுதியில் பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு வாசகம் அடங்கிய விளம்பர பலகை 30 இடங்களில் வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி 10 அடி நீளம் 6 அடி அகலம் கொண்ட இரும்பு சீட்டில் 1 '' இஞ்ச் இரும்பு பைப் மூலம் சட்டம் செய்து 1 ½ '' இஞ்ச் இரும்பு பைப் மூலம் குழி தோண்டி கான்கிரிட் போட்டு 30 இடங்களில் நடுவதற்கும் மேற்படி 10' x 6' இரும்பு சீட்டின் மீது பிளக்ஸ் பிரிண்ட் செய்து பொருத்தவும் உத்தேச செலவுத்தொகை ரூ.2. 00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டுவதோடு மேற்படி செலவினத்தை சொர்ண ஜெயந்தி SJSRY திட்டத்தின் கீழ் செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 45 – அனுமதிக்கப்பட்டது.**

37. இந்நகராட்சி அலுவலக ஆணையரது அறையில் உள்ள அவசர விளக்கிற்கான 800 VA – 12 ஏ பேட்டரி மின் கோளாறு காரணமாக முற்றிலும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பேட்டரியை மாற்றி புதியது வாங்கி பொருத்திடவும் உத்தேச செலவுத்தொகை ரூ.15,500/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று புதியதாக பேட்டரி வாஙகி பொருத்திட நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.10532/2008/இ3

**தீர்மான எண் : 46 – அனுமதிக்கப்பட்டது.**

38. நாகர்கோவில் நகராட்சி 24,27 சதுரக்கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்தது. தற்போது அரசாணை எண்.17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் ( தேர்தல்) துறை நாள் 14.11.2011 – ன்படி நாகர்கோவில் நகராட்சியை ஒட்டியுள்ள ஆசாரிபள்ளம் பேரூராட்சி, பெருவிளை ஊராட்சி, வடக்கு சூரஙகுடி ஊராட்சி, காந்திபுரம் ஊராட்சி மற்றும் கரிய மாணிக்கவும் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளை நாகர்கோவில் நகராட்சியுடன் சேர்க்கப்பட்டு அதன் பரப்பளவு 49,10 சதுர கிலோ மீட்டராக பரப்பு விரிவடைந்துள்ளது. நாகர்கோவில் நகராட்சியின் பரப்பு முன்னதைவிட தற்போது இரு மடஙகாக விரிவடைந்துள்ளதால் , நகராட்சி முக்கிய பணிகளான குடிநீர், மின்விளக்குகள் மற்றம் அத்தியாவசியப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டி இருப்பதால், பொறியியல் பிரிவுக்கு ஈப்பு ( வாகனம் )ஒன்று அத்தியாவசியமாக உள்ளது. மேலும் பொறியியல் பிரிவில் தற்போது இயஙகிக் கொண்டிருக்கும் ஈப்பு மார்ஷல் 2000 மாடல் வாகனம் எண்.றி.என்.74 இ / 6583 ஈப்பு 16.09.2000 – ல் வாஙகபப்பட்டது. சுமார் 12 வருட காலமாகிறது. மேற்படி இலக்கமுடைய ஈப்பு ( வாகனம்) அடிக்கடி பழுது ஏறபட்டு வருகிறது. பழுது பார்ப்பதற்கு அதிக தொகை செலவு செய்ய வேண்டியுள்ளது. ஆகையினால் நகராட்சி பொறியியல் பிரிவு பணிகளை விரைந்து முடிக்கவும், விரைந்து செயல்படுவதற்காகவும் ரூ.6.00 லட்சம் செலவின் ஈப்பு என்று வாஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டபப்படுகிறது.

அலுவலக குறிப்பு – நகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதால் குடிநீர், மின்விளக்குப் பணிகள் மற்றும் சாலை பணிகள் ஆகிய அத்தியாவசிய பணிகளை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதால் பொறியியல் பிரிவுக்கு ஈப்பு ஒன்று ரூ.6.00 லட்சம் செலவில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.19987/2011/இ1

**தீர்மான எண் : 47 – அனுமதிக்கப்பட்டது.**

39. நாகர்கோவில் நகராட்சியில் தற்போது எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் நான்கு ஊராட்சியும், ஒரு பேரூராட்சியும் நாகர்கோவில் நகராட்சியுடன் சேர்க்கப்பட்டு, 52 வார்டுகள் உள்ளன. அவ்வார்டுகளின் எல்லையை குறிக்க எல்கை மற்றும் பெயர் பலகை வைப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – நாகர்கோவில் நகராட்சி வார்டுகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால் வார்டு எல்லைகள் மற்றும் வார்டு பெயர்கள், பெயர் பலகை வைப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.20410/2011/இ1

**தீர்மான எண் : 48 – அனுமதிக்கப்பட்டது.**

40. இந்நகராட்சிக்குட்பட்ட டிஸ்லரி ரோட்டில் உள்ள நகராட்சி அலுவலருக்கு குடியிருப்பு வணிகத்தில் அமைந்துள்ள ஆணையர் குடியிருப்பிலிருந்து முன்னாள் ஆணையர் இடமாறி செற்தால், புது ஆணையர் மேற்கண்ட குடியிருப்பில் குடிபுகுவதற்கு வெள்ளையடித்து, மராமத்துப்பணிகள் செய்தமைக்கும் மற்றும் உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள நகர்மன்ற உறுப்பினர் அறையை வெள்ளையடித்து, மராமத்து பணிகள் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.2,35 இலட்சத்திற்கு நகர்மனறத்தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று செய்யப்பட்ட தொகையினை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற மேற்கண்ட பணிகள் செய்ய உத்தேச செலவு ரூ.2,35 லட்சத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 49 – அனுமதிக்கப்பட்டது.**

41. இந்நகராட்சிக்குட்பட்ட கோட்டார் சவேரியார் கோவில் திருவிழா வருடந்தோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. சவேரியார் கோவில் தேர் பவனி வரும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால், அச்சாலையினை புதுப்பித்து தார்தளம் அமைப்பதற்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 23.11.2011 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. திரு.வி.மாதவன் ( +) 0.26 % மதிப்பீட்டைவிட கூடுதல்
2. திரு.பி.இசக்கிமுத்து (–) 0.01 % மதிப்பீட்டைவிட குறைவு

அலுவலக குறிப்பு – 1. அனுமதிக்கலாம்.

2. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரா் திரு.பி.இசக்கிமுத்து (–) 0.01 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. நகா்மன்றத்தலைவா் முன்அனுமதி நாள் 15.11.2011 – ல் ரூ.2.00 இலட்சத்திற்கு டெண்டா் கோரியதற்கும் கோவில் திருவிழாவை முன்னிட்டு வேலையை உடனடியாக செய்ய வேண்டியிருப்பதால் நகா்மன்றத்தலைவா் அவா்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.124/2011–12

**தீா்மான எண் : 50 – அனுமதிக்கப்பட்டது.**

42. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி காந்தி மருத்துவமனை வளாக ஆராட்டு ரோட்டை பாா்த்து கட்டபபட்டுள்ள கடையில் கடந்த காலத்தில் குத்தகை அனுபவித்து வந்தவா் மேற்படி கடையினைகாலி செய்து மறு ஏலம விடப்படக்கூடாது என தொடாந்த வழக்கு எண்.ஒ.எஸ்.355/2005 –ன் 03.07.2007 – ம் தீா்ப்பாணையில் வழக்கு செலவுடன் சோ்த்து நகராட்சிக்கு எற்பட்ட இழப்பினை செலுத்தப்படவேண்டும் என தீா்ப்பளிக்கப்பட்டுள்ளது. ரூ.47,704/– வாதி செலுத்தப்படவேண்டும். மேற்படி இழப்பினை செலுத்த கடந்த கால குத்தகைதாரா் திருமதி.எ.சுப்பம்மாள் அவா்களுக்க அறிவிப்பு அனுப்பப்பட்டும் சாா்பாகவில்லை. மேலும் நாளது வரை செலுத்தப்படவில்லை. எனவே நகராட்சிக்கு ஏற்பட்ட இழப்பினை சம்பந்தப்பட்ட குத்தகைதாரரிடம் ஈடு செய்ய நிறைவேற்று மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும், அதற்கான செலவிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5003/2005/அ13

**தீா்மான எண் : 51 – நகா்மன்ற உறுப்பினா்களின் கோரிக்கையை ஏற்று இன்றைய தேதியில் இருந்து 15 நாள் கால அவகாசம் கொடுத்து அனுமதிக்கலாம் என்று மன்றம் முடிவு செய்யப்பட்டது.**

43. நாகா்கோவில் நகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள நகரமைப்பு அலுவலா் அவா்களின் குடியிரு;ப்பு பராமாிப்பு பணி செய்ய வேண்டியுள்ளதால் அதற்காக செலவாகும் செலவுத்தொகை ரூ.1.75 லட்சம் செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

**தீா்மான எண் : 52 – அனுமதிக்கப்பட்டது.**

44. நாகா்கோவில் நகராட்சியில் திடக்கழிவுகளை அப்புறப்படுத்த தனியாா் ஒப்பந்தகாரா் மூலம் வாகனம் மற்றும் பணியாளா்களை கொண்டு திடக்கழிவுகளை அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. அன்னாா் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதால் பல புகாா்களும் பொது சுகாதார கேடும் ஏற்பட்டு வருகிறது. இதனால் பொதுசுகாதார பிரிவிலிருந்து மாற்று ஏற்படாக தனியாா் வாகனம் மட்டும் மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களின் உத்தரவில் குறிப்பிட்ட தொகையில் இரு வாகனம் மட்டும் ஏற்பாடு

செய்து திடக்கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டியுள்ளனர். எனவே அவ்வாறு இரு வாகனம் ஏற்பாடு செய்யவும், அதற்கான தொகையில் செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இரு வாகனம் அமர்த்தி கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி வாகனத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்த வாடகையினை வழஙகவும், அதற்க்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.13013/2010/எச்.1

**தீர்மான எண் : 53 – அனுமதிக்கப்பட்டது.**

45. இந்நகராட்சியில் குழாய் திருப்புனராக பணிபுரிந்து 30.09,2011 – ல் ஓய்வு பெற்ற திரு.எஸ்.தஙகசாமி அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி நிர்வாக பஙகுத் தொகையான ரூ.10,000/– ம் ( அரசு ஆணை எண்.240 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை ( ந.ப.3) நாள் 08.08.2009 – ன் படி இந்நகராட்சிப் பொது நிதியில் இருந்து வழஙகிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.13120/2009/பி1

**தீர்மான எண் : 54 – அனுமதிக்கப்பட்டது.**

46. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 ( புதிய வார்டு எண்.31 ) பாலமோர் ரோட்டில் கழிவு நீர் ஓடை மற்றும் கல்வெர்ட் அமைக்கும் பணிக்கு 02.12.2011 அன்று இரண்டாவது முறை நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு.றி.நடேசன் ( +) 0.04 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.எஸ்.கண்ணன் (–) 0.37 % மதிப்பீட்டைவிட கூடுதல்

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. அனுமதிக்கலாம்.

2.வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.றி.நடேசன் (+) 0.04 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3. நகர்மன்றத்தீர்மானம் எண்.791 நாள் 16.12.2010 – ல் ரூ.7,00,00,0/– ற்கு மன்றம் அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

ம.எண்.23/2011–12

**தீர்மான எண் : 55 – அனுமதிக்கப்பட்டது.**

47. சொர்ண ஜெயந்தி திட்டம் 2011–2012 – நகர்புற ஏழை மக்களுக்கான வேலைவாய்ப்பு முன்னேற்றத்திறகான சுய தொழில் பயிற்சி (STEP –UP) அலகிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரது ந.க.எண்.12919/2011/UPA– 3 நாள் 16.06.2011 – ன் படி ரூ.26,96,400/– ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான தொகை மிக விரைவில் பெறப்பட இருக்கிறது. மேலும் பயிற்சி அலகில் 2007–2008– ல் ரூ.2,06,510/– மூ, 2008–2009 – ல் ரூ.3,23,000/– ம் , 2009–2010 – ல் ரூ.91,218/– ம் , 2010–2011– ல் ரூ.1800/– ம் மற்றும் 22.08.2011 வரை வங்கிக் கணக்கில் சேரப்பட்ட வட்டியுமாக சேர்த்து மொத்தம் ரூ.11,22,1 85/– செலவு செய்யப்படாமல் வங்கி கணக்கில் காணப்படுகின்றன. இந்திய அரசு நகர்புற வறுமை ஒழிப்பு அமைச்சகத்தின் கடித நாள் 27.09.2011 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண.3122/2010/சி1 , நாள் 11.11.2011 ஆகிய கடிதஙகளின்படி SJSRY திட்ட அலகுகளில் பயிற்சி அலகிற்கு மிக முக்கியத்துவம் அளிப்பதற்கும், 250 கூடுதல் பயனாளிகளுக்கு பயிற்சி வழஙகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே 2011 – 2012 – க்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.26,96,400 + செலவு செய்யப்படாமல் உள்ள தொகை ரூ,11,22,185/– மொத்தம் ரூ.38,18,585/– பயனாளிகளுக்கு பயிற்சி வழஙக வேண்டியுள்ளது. கூடுதல் பயனாளிகளுக்கு ஆகும் செலவுத்தொகையை தற்போது SJSRY மற்ற அலகிலிருந்து செலவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது..

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.3122/2011/சி1 நாள் 14.09.2011 – ன் படி பயிற்சி நடத்தும் நிறுவனஙகளிடமிருந்து விலைப்பட்டியல் பெறப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 5 பயிற்சி நிறுவனஙகளின் விபரம் மற்றும் விலைப்பட்டியல் பின்வருமாறு : –

| 1 | தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் | பயிற்சிகள் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|---|
| 1 | Nagas Ind Training School<br>370 Kurukulam road<br>Thiruvengadam | 1, Elect.Servicing | Course fee for Candi -4200<br>Course met. - 1000<br>Tool Kit - 750<br>Stipend - 1200 |
| | | | Total Rs.7150/- |
| | (Micro Int.Tech.Institute<br>34 A. Near Vetri Vinayagar temple, SLB South road<br>Nagercoil – உடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது | 2. Ref .AC Mech<br>3. Welding | Course fee for Candi -4200<br>Course met. - 1000<br>Tool Kit - 800<br>Stipend - 1200 |
| | | | Total Rs.7200/- |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | 4. Elect.Tech<br>5.Motor revinding | Course fee for Candi -4000<br>Course met. - 1200<br>Tool Kit - 800<br>Stipend - 1200<br>Total Rs.7200/- |
| | | 6.Cutting, Tailoring, Embroider ornamentalist | Course fee for Candi -4200<br>Course met. - 1200<br>Tool Kit - 800<br>Stipend - 1200 |
| | | | Total Rs.7400/- |

குறிப்பு – மேற்படி நிறுவனம் Micro Int.Tech Inst. உடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு பயிற்சி அளிப்பதாக தெரிவித்தது. தற்போது Micro.Int. நிறுவனம் மேற்கண்ட நிறுவனம் தஙகளுக்கு குறைவ்ாக பயிற்சி கட்டணம் தர இருப்பதால் பயிற்சியை தர இயலாது என தெரிவித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | Asratic Ind.Trg.School<br>82/289 Rajapalayam | 1, Elect.Servicing<br>2. Ref .AC Mech<br>3. Welding<br>4. Elect.Tech<br>5.Motor revinding<br>6.Cutting, Tailoring, Embroider ornamentalist | Course fee for Candi -5400<br>Course met. - 400<br>Tool Kit - 600<br>Stipend - 1200<br>Total Rs.7600/- |
| II | (Micro Int.Tech.Institute<br>34 A. Near VettiVinayagar temple, SlB South road<br>Nagercoil – உடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது | | |

குறிப்பு – மேற்படி நிறுவனம் Micro Int.Tech Inst. உடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு பயிற்சி வழஙகுவதாக தெரிவித்துள்ளது. இந்த நிறுவனத்தில் 100 பயனாளிகளுக்கு பயிற்சி வழஙகலாம்.

| | | | |
|---|---|---|---|
| | SSI IT Education, chennai | 1MSO Tally<br>2. Photo Shop<br>3.Multimedia<br>4.Animation<br>5. HW & Software | Course fee for Candi -2750<br>Course met. - 750<br>Tool Kit - 1500<br>Stipend - 2750<br>Total Rs.7750/- |
| III | Hi.Tec Solutions<br>55 IInd Floor<br>Padagalingam Building<br>Veppamoodu Junction<br>Nagercoil - உடன் ஒப்பந்தம் செய்துள்ளது | | |

குறிப்பு – மேற்படி நிறுவனம் Hi-Tech Solutions, Nagercoil -3. உடன் ஒப்பந்தம் செய்து பயிற்சி அளிப்பதாக தெரிவித்துள்ளது. நாள் ஒன்றிற்கு 100 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்க மட்டுமே இடவசதி உள்ளது.

| | | |
|---|---|---|
| IV.CSC Comçter Education<br>Kalluvettil Teenu Centre<br>Near District Court<br>Nagercoil | 1..Modern front off Management<br>2, Multimedia animation<br>3.Audio and Video Editing<br>4. Web Designing<br>5.DTP<br>6.Comp.Hardware Servicing<br>7. Cell Phone Service. | Course fee for Candi -5500<br>Course met. - 500<br>Stipend - 2000 |
| | | Total Rs.8000/- |
| | | Course fee for Candi -4450<br>Course met. - 500<br>Tool kit - 2000<br>Stipend - 1050 |
| | | Total Rs.8000/- |

குறிப்பு – மேற்படி நிறுவனத்திற்கு இடவசதியுள்ளது. இந்நிறுவனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| V.HCL Ifo System LImited<br>Nagercoil | 1..H.W. Net working<br>2. Modern front of Management<br>3. Office automation and other courses | Course fee for Candi -6000<br>Course met. - 300<br>Tool kit - 700<br>Stipend - 1200 |
| | | Total Rs.8200/- |

குறிப்பு – மேற்படி நிறுவனம் நாகர்கோவிலில் செயல்பட துவங்கவில்லை. பயிற்சிகள் சம்பந்தப்பட்ட விபரங்களும் நகராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை,

மேற்படி 5 நிறுவனங்களிடமிருந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி வழியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையிலும் மற்றும் Negotiated Price Bid அடிப்படையிலு;ம் வரிசை எண்.1 தொழில் நுட்ப பயிற்சிகள் நடத்துவதற்காக சராசரி ரூ.7200/– மற்றும் ரூ.7400/– ம் விலை நிர்ணயம் செய்துள்ளார்கள். வரிசை எண்2 தொழில் நுட்ப பயிற்சிகள் நடத்துவதற்காக ரூ.7600/– என விலை நிர்ணயம் செய்துள்ளார்கள். வரிசை எண்.3 கணிணி சம்பந்தப்பட்ட பயிற்சிகள் வழங்க ரூ.7750/– என விலை நிர்ணயம் செய்துள்ளார்கள். வரிசை எண்.4. கணிணி சம்பந்தப்பட்ட பயிற்கிள் வழங்க ரூ.8000/– என விலை நிர்ணயம் செய்துள்ளார்கள். வரிசை எண்.5 ரூ.8200/– என விலை நிர்ணயம் செய்துள்ளார்கள். மேலும் இந்த நிறுவனம் நாகர்கோவிலில் செயல்பட துவங்கவில்லை.

எனவே வந்துள்ள 5 நிறுவனங்களில் உள்கட்டமைப்பு வசதி பயிற்சியாளர்களின் விபரம் மேலும் பயிற்சிக்குப்பின் வேலையளிக்கும் திறன் மற்றும் குறுகியகாலத்தில் அதிக பயனாளிகளுக்கு ( 588)

பயிற்சிகள் வழஙகப்படவேண்டிய அவசியம் ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனஙகளை தேர்வு செய்யும் வண்ணம் மன்றத்தின் அனுமதிக்க சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நான்கு நிறுவனஙகளின் கடித விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு

3. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 18.11.2011 முதல் CSC கணினி நிறுவனத்தில் பயிற்சி துவஙகப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் 14317/2011/எச்.5

**தீர்மான எண் : 56 – அனுமதிக்கப்பட்டது.**

48.. நாகர்கோவில் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் றி.என்.74 எல் 5166 – க்கு புதியதாக 6 டயர் மற்றும் டியூப் வாஙக 23.11.2011 அன்று விலைப்புள்ளிகோரப்பட்து. அதில் கீழ்க்ண்ட 3 நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மில்டன் ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில் | 70,000/– |
| 2 | அசோக் டயர்ஸ், வடசேரி | 71,200/– |
| 3 | பாண்டியன் ஆட்டோமோபைல்ஸ், நாகர்கோவில் | 70,400/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 – ல் கண்ட நிறுவனத்திறகு வினியோக உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

<u>அலுவலக குறிப்பு –</u> 1.வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 – ல் கண்ட மில்டன் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்திற்கு வினியோக உத்திரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேலும் அந்நிறுவனத்திற்கு உரிய தொகையினை வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்,

கோப்பு எண்.11801/2011/எச்.2

**தீர்மான எண் : 57 – அனுமதிக்கப்பட்டது.**

49. நாகர்கோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் றி.என்.74 – 2216 – Hydralic Jakki பழுதுப்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய 23.11.2011 – ல் அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்ட 3 நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ |
|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி | 12,000 |
| 2 | புவனேஸ்வரி டிப்பர் ஒர்க்ஸ், கண்டன்விளை | 10750 |
| 3 | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ் | 12200 |

எனவே மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த வரிசை எண்.2 . ல் கண்ட நிறுவனத்திற்கு வினியோக உத்திரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.2 – ல் கண்ட நிறுவனத்திற்கு வினியோக உத்திரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேலும் அந்நிறுவனத்திற்கு உரிய தொகையினை வழஙகவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.10856/2011/இ2

**தீர்மான எண் : 58 – அனுமதிக்கப்பட்டது.**

50. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30– ல் நகர்மன்ற உறுப்பினரின் மனுவின்படி தழியபுரம் ரோடு, ஒற்றைத்தெரு, கனகமூலம் புதுத்தெரு, லெட்சுமிபுரம் வடக்குத்தெரு, சோழராஜபுரம் ஆகிய தெருக்களில் மின் கம்பஙகள் அமைத்து அதில் 5 எண்ணம் குழல் விளக்குகள் பொருத்தவும் மேற்படி செலவினத்துக்கு மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21186/2011/இ4

**தீர்மான எண் : 59 – அனுமதிக்கப்பட்டது.**

51. இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தின் தெற்கு பக்கம் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் குடிநீருக்காக புதிய இணைப்பு எடுக்கப்பட்டுள்ளதால் தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமான தார் ரோட்டை வெட்டியதால் அதற்கு நெடுஞ்சாலைத்துறையிலிருந்து வரப்பெற்ற கடித எண.16/.2011/ ப நாள் 11.10.2011 – ன் படி ரோடு தோண்டியதற்கு கட்டணம் ரூ.12,000.– செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்துக்கு மன்ற அனுமதிக்கு

கோப்பு எண்.12322/2011/இ2

**தீர்மான எண் : 60 – அனுமதிக்கப்பட்டது.**

52. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.46 ( புதிய வார்டு எண்.49 ) பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2011 –2012 கீழ் ரூ.6.00 இலட்சத்தில் மேலராமன்புதூர் தூய திருக்குடும்ப ஆலயத்தின் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ( 60000 லிட்டர் கொள்ளளவு ) அமைக்கும் பணிக்கு 17.11.2011 அன்று இரண்டாவது முறை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு.என்.சபேசன் ( +) 0.05 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.பி.தஙகசாமி (–) 13.11 % மதிப்பீட்டைவிட கூடுதல்

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அனுமதிக்கலாம்.

2.வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.என்.சபேசன் ( +) 0.05 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், ஊரக வளர்ச்சி முகமை கடித எண்.1983/2011/அ3 26.08.2011 – ல் ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

4. நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙூகியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.114/2011–12

**தீர்மான எண் : 61 – அனுமதிக்கப்பட்டது.**

53. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 ( புதிய வார்டு எண்.33 ) பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2011 –2012 கீழ் சிதம்பரம் நகர் பகுதியில் ரூ.2.25 இலட்சத்தில் பல் நோக்கு கட்டிடம் கட்டும் பணிக்கு 17.11.2011 அன்று இரண்டாவது முறை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு.எ.பாண்டியன் ( +) 0.10 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.என்.சபேசன் (–) 2.70 % மதிப்பீட்டைவிட கூடுதல்

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அனுமதிக்கலாம்.

2.வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.எ.பாண்டியன் ( +) 0.10 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், ஊரக வளர்ச்சி முகமை கடித எண்.1983./2011.அ3 .26.08.2011 – ல் ரூ 2,25,000.– ற்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

4. நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙூகியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.115/2011–12

**தீர்மான எண் : 62 – அனுமதிக்கப்பட்டது.**

54. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 ( புதிய வார்டு எண்.19 ) பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2011 –2012 கீழ் வல்லன் குமாரவிளையில் பழுதடைந்துள்ள குமரன் நூல் நிலைய கட்டிடத்தை மாற்றி புதிய கட்டிடம் ரூ.3.80 இலட்சத்திற்கு 17.11.2011 அன்று இரண்டாவது முறை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு.என்.மணிகண்டன் ( –) 0.05 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.றி.ராஜப்பா (+) 4.34 % மதிப்பீட்டைவிட கூடுதல்

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அனுமதிக்கலாம்.

2.வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.என்.மணிகண்டன் (–) 0.05 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், ஊரக வளர்ச்சி முகமை கடித எண்.1983./2011.அ3 .26.08.2011 – ல் ரூ 3,80,000.– ற்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

4. நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.116/2011–12

**தீர்மான எண் : 63 – அனுமதிக்கப்பட்டது.**

55. நாகர்கோவில் நகராட்சி பகுதிதிளில் பிளாஸ்டிக்ஸ் தூக்கு பைகள் பயன்படுத்துவோர் மீதும் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் பிரிந்து வழஙகாதவர்கள் மீதும் அபராதம் தொகை விதிக்க அதற்கான ரசீது புத்தகம் அச்சடிக்க அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி 28.11.2011 – ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு.

| வ,எண் | டெண்டர் முகவரி | அச்சடிக்கும் புத்தகம் எண்ணிக்கை | ரூ. |
|---|---|---|---|
| 1 | சொர்ணா அச்சகம்<br>அண்ணா பேருந்து நிலையம்<br>பத்தல்விளை | 70 | 4060/– |
| 2 | ஜோசி அச்சகம்,<br>கணேசபுரம், நாகர்கோவில் | 70 | 3780/– |
| 3 | எஸ்.எஸ்.ஆப்செட்<br>மீனாட்சிபுரம்<br>நாகர்கோவில் | 70 | 4130/– |

மேற்படி விலைப்புள்ளி விலைகளில் குறைந்த தொகைக்கு கோரிய ஜோசி அச்சகத்திற்கு அச்சடிக்க வேலை செய்ய உத்தரவு வழஙகவும் அதற்கான செலவு தொகை ரூ.3780/– கொடுக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த தொகை கொடுத்துள்ள ஜோதி அச்சகத்திற்கு வேலை செய்ய உத்திரவு வழஙகவும் அதற்கான தொகையினை வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்,.

கோப்பு எண்.18506/2009/எச்.3

**தீர்மான எண் : 64 – அனுமதிக்கப்பட்டது.**

56. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் துறை அரசாணை எண்.201 நாள் 30.10.1998 – ல் நகராட்சிகளின் தகவல் தொழில் நுட்ப பணிகளுக்காக ஒரு முறைமை வல்லுநர் (System Analysist ) 7 மண்டல இயக்குநரகத்திற்கு 7 எண்ணம் திட்ட அமைப்பாளர் ( Programmer ) 103 நகராட்சிகளுக்கு 103 எண்ணம் உதவி திட்ட அமைப்பாளர் ( Assistant Programmer) மற்றும் 59 எண்ணம் புள்ளி விபர குறிப்பாளர் ( Date Entry operator) பணியிடஙகள் தோற்றுவிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறைஅரசாணை எண்.57 நாள் 30.11.2007 – ல் மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு 50 எண்ணம் புள்ளி விபர குறிப்பாளர் பணியிடஙகளும் 7 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகஙகளுககு 8 எண்ணம் புள்ளி விபர குறிப்பாளர் பணியிடஙகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியிடஙகளில் பணியமர்த்திய பணியாளர்களுக்கு தமிழ்நாடு நகராட்சி தகவல் தொழில் நுட்ப பணிவிதிகள் 2010 என விதிமுறை வகுத்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.5163./2003/.IT –1 நாள் 24.10.2010– ன் படி அரசின் அனுமதி கோரியதற்கு அரசு கடிதம் எண்.6288/ME1.2008–14 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் துறை நாள் 15.11.2011 – ல் மேற்படி பணியிடஙகளுக்கு நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசு கடிதம் எண.16288/ ME1/2008–14 நாள் 15.11.2011 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u> – நகராட்சிகளின் வரி மற்றும் வரியில்லா இனஙகளின் வசூல், பிறப்பு, இறப்பு சான்று வழஙகுதல் கட்டிட அனுமதி வழஙகுதல் நகராட்சியின் வரவு மற்றும் செலவு கணக்குகள் போன்ற அனைத்து பணிகளும் கணிணி மயமாக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிகளை பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் வழஙக முடிகிறது. மேற்படி கணிணிப்பணிகளை நகராட்சி பணியாளர்கள் மூலம் செயல்படுத்தினாலும் கணிணி மென் பொருள் ( Software) தொழில் நுட்பத்தில் அவ்வப்போது ஏற்படும் குறைகளை களையவும், மேற்படி கணிணிப்பணிகளை மேற்பார்வையிடவும் நகராட்சிக்கு கணிணி உதவி திட்ட பணியாளர் மற்றும் புள்ளி விபரக்குறிப்பாளர் பணியிடம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சியில் கணிணி உதவி திட்ட அமைபபாளர் மற்றும் புள்ளி விபர குறிப்பாளர் பணியிடஙகள் தோற்றுவிக்கவும் பணியாளர்களை நியமனம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.20980/2011/சி1

**தீர்மான எண் : 65 – அனுமதிக்கப்பட்டது.**

57. இந்நகராட்சி அலுவலக உதவியாளர் திரு.எஸ்.வி.பெருமாள் என்பவர் பள்ளியாடி ரெத்னா சிட்பண்ட்க்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.91,194/– ஐ அன்னாரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து அனுப்பக் கேட்டது சம்பந்தமான வழக்கு E.P.in E.P.no.48/2006 in ARC.No.6/05 மாவட்ட முன்சீப் கோர்ட் குழித்துறை) – க்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.3000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.7010/2010/சி1

**தீர்மான எண் : 66 – அனுமதிக்கப்பட்டது.**

58. வார்டு எண்.12, கதவு எண்.105, 106 தளவாய்தெரு சொத்துவரி வரிவிதிப்பு எண்.15848 வரிவிதிப்பாளர் பெயர் ஜெய கௌரி

மேற்படி வரிவிதிப்பு நகராட்சி சொத்துவரி கேட்பில் வணிகம் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்து அரையாண்டுக்கு ரூ.2796/– ஆக வரி கூடுதலாக உள்ளது எனவும் குடியிருப்பு அடிப்படையில் வரி நிர்ணயம் செய்ய கன்னியாகுமரி நுகர்வோர் நீதிமன்றம் வழக்கு எண்.சி.ஆர்.181/2011 வழக்கு நடைபெறுவதால் மேற்படி குடியிருப்பு நேராய்வு செய்யப்பட்டதின் விபரம் கீழ்வருமாறு.

1. சொந்த குடியிருப்பு
2. Zone – D
3. Zone Rate – 0.80 ( 0.78 )
4. பரப்பளவு
5. தரைதளம் 45 x 23 1035

முதல் தளம் 45 x 23 = 1035
கழிக்க 9.75 x 20 = 195 840
------ ------
840 1875

நகராட்சி நிர்வாக இயக்குனர் சுற்றறிக்கை ந.க.எண்.20364/2009 /ஆர் – 1 நாள் 26.06.2009 அறிவுரைப்படி 1875 சதுர அடி படி சொந்த குடியிருப்பு அடிப்படையில் நகராட்சி நிதியிழப்பு ஏற் படாதவாறு நடப்பு ஆண்டு முதல் வரி குறைவு செய்யவும் கடந்த ஆண்டுகளுக்கு வரி குறைவு தேவையில்லையெனவும் 2011–2012 முதல் அரையாண்டு முதுல் தற்போது உள்ள வீட்டின் சதுர அடி படி வரி நிர்ணயம் செய்தால் நுகர்வோர் வழக்கு கைவிடப்படும் என மனுதார் கோரியுள்ளபடி நடப்பு ஆண்டு முதல் குடியிருப்பு அடிப்படையில் வரி நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்

கோப்புஎண்.9714/2010/அ3

**தீர்மான எண் : 67 – அனுமதிக்கப்பட்டது.**

59. இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 12 – வது நிதிக்குழுப்படி பரிந்துரை திட்டம் 2008–2009 – ல் புதியதாக வாஙகப்பட்ட டம்பர் பிளேசர்கனரக வாகனஙகள் றி.என்.74 எஸ்.9338, மற்றும் றி.எஸ்.74 எஸ்.9273 – க்கு இலவச முதல் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்ட வகைக்கு M/S.Krystal Motors (P) Limited, Salem – 5 நிறுவனத்திற்கு oil உள்பட இதர பொருட்கள் வழஙகப்பட்ட வகைக்கு ரூ.6584 /– யை வழஙக கோரப்பட்டுள்ளது. மேற்படி விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வாகனம் எண் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | றி.என்.74 எஸ – 9338 | 3292/– |
| 2 | றி.என்.74 எஸ்.9273 | 3292/– |
| | மொத்தம் | 6584/– |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.14964/2011/எச்.2

**தீர்மான எண் : 68 – அனுமதிக்கப்பட்டது.**

60. இந்நகராட்சி பழைய ஈப்பு வாகனம் றி.என்.74 –3774 – ஐ பொது ஏலத்தில் விற்பனை செய்திட இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்பு துறை, சென்னை அவர்கள் செ.மு.ஆ.எண்.ஏ1/எச்.1/11676/2011 நாள் 26.09.2011 – ன் படி ரூ.20,000/– விலை நிர்ணயம் செய்து அனுமதி வழுங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 15.12.2011 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஏலத்தில் இருவர் கலந்து கொண்டதில் உயர்ந்த ஏலக்கேள்வியாக ரூ.21,500/– க்க திரு.சி.அலெக்சாண்டர் என்பவராலும், ஒப்பந்தப்புள்ளியில் மூன்று பேர் கலந்து கொண்டதில் உயர்ந்த பட்சமாக ரூ.33,120/– க்கு திரு.ராஜாசுந்தர்சிங என்பவராலும் கேட்கப்பட்டது. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின்படி உயர்நத் பட்சமான திரு.ராஜா சுந்தர்சிங என்பவரின் ஒப்பந்தப்புள்ளிதொகை ரூ.33,120/– ஐ அனுமதித்து உத்தரவு வழஙகிடவும் மேற்படி ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல அறிவிப்பினை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகார்கோவில் மூலம் தினசரியில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.1680/– ஐ செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1, இயக்குனர், மோட்டார் வாகன பராமரிப்புதுறை, சென்னை அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.20,000/– ஐ விட திரு.ராஜா சந்தர்சிங என்பவரின் கேள்வி தொகை ரூ.33,120/– கூடுதலாக உள்ளதால் அனுமதிக்கலாம்.

2. விளம்பர கட்டணம் ரூ.1680/– ஐ செலவு செய்ய அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.285/2004/இ3

**தீர்மான எண் : 69 – அனுமதிக்கப்பட்டது.**

61. இந்நகராட்சிக்குட்பட்ட புல எண்.இ17/146 – ல் கதவு எண்.67/1 – 67/2 ஐ இடித்து கட்டிடம் கட்டி வரும் திரு.என்.டி.ஜோசப் என்பவர்புல எண்.இ17/147 சாலையிலும் புல எண்.இ17/49 ஓடையிலும் ஆக்கிரமித்து கட்டி வருவதால் இது தொடர்பாக நாகர்கோவில் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.எண்.74/2010 எண்ணில் வழக்கு நடைபெற்று வருகின்றது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் தாக்கலான ஐ.ஏ.எண்.64*/2011 நகராட்சிக்கு சாதகமாக நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து கட்டிடத்தின் உரிமையாளர் மதுரை உயர்நீதிமன்றத்தில் CRP (MD) எண்/2304/2011– ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திருமதி.ஸ்ரீமதி நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகவும், வழக்கறிஞர் கட்டணத்திற்கும், வழக்கிடை செலவுகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.22394/2011/எப்.1

**தீர்மான எண் : 70 – அனுமதிக்கப்பட்டது.**

62. நாகர்கோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.ற்றி.என்.74/டி–0199–க்கு 2011–2012–ம் ஆண்டு தகுதிசான்றிதழ பெறுவதற்கு பழுதுகள் நீக்கி வேலைசெய்ய உத்தேச செலவு ரூ.12,000/–ம் ஆகும் . எனவே மேற்படி தொகைக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u> –அனுமதிக்கலாம்

கோப்பு எண்.22556/2011/எச்.2

**தீர்மான எண் : 71 – அனுமதிக்கப்பட்டது.**

63. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31 –ல் வெள்ளாளர் மேலத்தெருவில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்த ஒப்பந்தப்புள்ளி நடைப்பெற்று நகர்மன்ற அனுமதி எண்.643 நாள் 15.09.2011–ன் படி வேலை உத்தரவு வழஙகப்பட்டது. தற்போது வெள்ளாளர் மேலத்தெருவில் போதிய நிலத்தடி நீர் இல்லாத காரணத்தினால் பழைய வார்டு எண்.31 & 32 வார்டுகளை சேர்த்து 29–வது வார்டாக ஆனதால் அதற்கு உட்பட்ட காணியாளன் புதுத்தெருவில் ஆழ்குழாய் கிணறு அமைக்க மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அதே மதிப்பீடு தொகைக்கு செய்ய அனுமதிக்கலாம்

கோப்பு எண்.12721/2011/இ2

**தீர்மான எண் : 72 – அனுமதிக்கப்பட்டது.**

64. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31–ல் தெற்குரதவீதியில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்த ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று நகர்மன்ற அனுமதி எண்.641 நாள் 15.09.2011 –ன் படி வேலை உத்தரவு வழஙகப்பட்டது. தற்போது தெற்கு ரதவீதியில் போதிய நிலத்தடி நீர் இல்லாத காரணத்தினால் தற்போது வார்டு எண்.31 & 32 வார்டுகள் இணைத்து 29–வது வார்டாக உள்ளதால் அதற்குட்பட்ட வஞ்சிமார்த்தாண்டன் புதுத்தெருவில் ஆழ்குழாய் கிணறு அமைக்க மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அதே மதிப்பீடு தொகை செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 73 – அனுமதிக்கப்பட்டது.**

65. மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வெறிநாய் தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாக திரு ஜெ.ஆர்.ஜீலியஸ், த/பெ. ஜெ.ரிச்சர்டு, 49 சென்ட் அந்தோணிதெரு, தளவாய்புரம் என்பவர் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு எண்.WP(MD) எண்.9434/2011–ல் பிரதிவாதியாக (1) செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழஙகு துறை (2)ஆணையர், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகுத்துறை (3) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் (4) நாகர்கோவில் நகராட்சி ஆணையர் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சி சார்பாக மதுரை உயர்நீதிமன்ற கிளை திருமதி ஸ்ரீமதி, வழக்கறிஞர் அவர்கள் வழக்கை எடுத்து நடத்தவும் மற்றும் பிரதிவாதி 1,2 மற்றும் 3 ஆகியோருக்கு அரசு வழக்குறைஞர் மூலம் வழக்கை எடுத்து நடத்துவதற்கும் வழக்கு சம்பந்தமாக அனைத்து செலவீனஙகளுக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.25,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> –அனுமதிக்கலாம்

கோப்பு எண்.018537/2011/எச்.1

**தீர்மான எண் : 74 – அனுமதிக்கப்பட்டது.**

**66.** கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்து 10.12.2011 அன்று காலை 11.00 மணிக்கு இந்நகரில் தினமும் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மாண்புமிகு தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நகர்மன்றத்தலைவர் அவர்கள், நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் இப்பகுதியில் தினமும் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முறையினை செயல்முறை விளக்கப்படமாக மும்பையை சார்ந்த கான்கார்டு புளூ டெக்னாலஜி நிறுவனத்தினர் விளக்கி கூறினார். அதன் பின்பு மேற்படி நிறுவனத்தின் பிரதிநிதி கூறும்போது திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழிற் நுட்பம் ஜெர்மன் நாட்டு தொழில் நுட்பமாகுமெனவும், இதனை இந்தியாவில் செயல்படுத்துவதற்கு தகுந்தாற்போல் வடிவமைக்கப்பட்டு எவ்விதமான சுற்று சூழல் பாதிப்பும் ஏற்படாத வகையில் வடிவமைக்கப்பட்டது எனவும், இதில் தினமும் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத கழிவு என பிரித்தெடுக்காமல் அப்படியே எடுத்து மின்சாரம் தயாரிக்க பயன்படுத்தலாம் எனவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் மேற்படி நிறுவனம் இந்தியாவில் முதன் முறையாக தற்போது புனே நகராட்சியில் இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சிறந்த முறையில் மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதை போல் இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளையும் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க இந்நகராட்சிக்கு சொந்தமான தற்போது திடக்கழிவுகள் சேரிக்கப்பட்டு வரும் வலம்புரிவிளையில் 3 ஏக்கர் நிலத்தை 30 ஆண்டுக்கு குத்தகை அடிப்படையில் வழஙகினால் சுமார் 8–9 மாதத்திற்குள் மின்சாரம் தயாரிக்கும் பணியினை தொடஙகுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி திட்டத்தை இந்நகரில் செயல்படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென ஒருமித்த கருத்து தெரிவித்தமையால், இதனை செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என கேட்டு வரப்பட்ட நகர்மன்றத்தலைவர் அவர்களின் கடிதமும், மும்பையை சேர்ந்த கான் கார்டு புளூ டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் கடிதமும் மன்றத்தின் பார்வைக்கு

<u>**அலுவலக குறிப்பு**</u>**–** இந்நகராட்சி பகுதியில் தினமும் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை நகராட்சிக்கு சொந்தமான பீச்ரோட்டில் உள்ள வலம்புரிவிளையில் கொட்டப்பட்டு வருகிறது. இங்கு சுமார் ஆறு வருடமாக சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகள் விற்பனையாகாமல் உள்ளன. இங்கு தினமும் சுமார் 100 மெட்ரிக் டன் கழிவுகள் வரப்படுகின்றன. தற்போது இந்நகராட்சியோடு புதியதாக 4 ஊராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியும் இணைக்கப்பட்டுள்ளதால், இதைவிட அதிகமாக கழிவுகள் வரப்படும் நிலையுள்ளது. தற்போது திடக்கழிவுகள் அதிகமாக தேஙகி காணப்படுவதால் தற்போது வரப்படும் கழிவுகளை சேரிக்க முடியாத நிலையிலும், மேலும் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால் அதிகமான நிதியிழப்பும், சுகாதாரக்கேடும் ஏற்பட்டு வருகிறது. இந்நகர் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் காலியாக எந்தவிதமான தரிசு நிலமும் தேவைக்கேற்ப கிடையாது. மேலும் மற்ற பகுதிகளில் இடஙகளை தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும் போது அப்பகுதியிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளும், பொதுமக்களும் எதிர்ப்பு

தெரிவிப்பதால் இடத்தை தேர்வு செய்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே தினமும் சேகரிக்கப்படும் கழிவுகளையும் ஏற்கனவே தேஙகியுள்ள திடக்கழிவுளில் அகிபட்சமாக எடுத்துக்கொள்ளவும் கேட்டுக்கொண்டபடியால் மேற்படி நிறுவனத்திற்கு கட்டணம் எதுவுமின்றி திடக்கழிவுகளை வழஙகி இத்திட்டத்தினை அமுல் படுத்தினால் ஏற்கனவே தேஙகியுள்ள திடக்கழிவுகளையும் மின்சாரம் தயாரிக்க பயன்படுத்துவதால் தேஙகியுள்ள கழிவுகளால் ஏற்படும் சுகாதார கேடும் குறைய வாய்ப்புள்ளது. எனவே பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி சொந்தமான வலம்புரிவிளை நகர புல எண்.எம்.7.9/2 ரயத்துவாரி இடத்தில் மொத்தமுள்ள 14 ஏக்கர் 83 செண்ட் இடத்தின் பின்பக்கம் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் நகராட்சிக்கு சொந்தமான மேற்கண்ட இடத்தில் நகராட்சி ஒதுக்கீடு செய்யும் 3 ஏக்கர் இடத்தையும் பீச்ரோட்டிலிருந்து 40 அடி அணுகுசாலை நீஙகலாக குத்தகை அடிப்படையில் 30 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு சட்டவிதிப்படி வழஙக மன்றத்தின் ஒப்புதலோடு அரசின் அனுமதி பெறவேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக கருத்துரை அரசுக்கு சமர்ப்பித்து, அனுமதி பெறவும். மேலும் இது தொடர்பான வரைவு ஒப்பந்தம் நகர்மன்ற வழக்கறிஞர் மூலமாக தயாரிக்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம். கோப்பு எண்.22354/2011/எச்.1

**தீர்மான எண் : 75 – அனுமதிக்கப்பட்டது.** நகராட்சி உரக்கிடங்கில் குப்பை அதிகமாக தேங்கி கிடக்கிறது. மாற்று இடம் இதுவரை கிடைக்காத சூழ்நிலையில் அவசியம் அவசரம் கருதி இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்த மன்றத்தால் முடிவு செய்யப்பட்டது.